2010 ஏப்ரல் 30] [திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்]

உதவியை நாடிக் கொண்டிருக்கிறோம். எனவே, தொடர்ந்து வலியுறுத்தி, விரைவாக இந்தத் திட்டத்தைப் பெற்று, வேலூர் நகரைச் சுற்றி வட்டச் சாலை அமைவதற்கு தொடர்ந்து மாநில அரசு நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

5. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2010

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சிவபுண்ணியம், சொல்லுங்கள்.

திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவை இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் அறிமுக நிலையிலேயே எதிர்க்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என். நன்மாறன்.

***திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி அறிமுக நிலையிலேயே எதிர்க்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு.

[2010 ஏப்ரல் 30

திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கூட்டுறவுச் சங்கங்கள் சட்டமுன்வடிவை ஆரம்ப நிலையிலேயே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் கடுமையாக எதிர்க்கின்றோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்.

திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இரண்டு பேரும் ஒரே கட்சியில்தானே இருக்கிறீர்கள்?

திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்: அதேதான். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்.

டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவை ஆரம்ப நிலையிலேயே மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க்கின்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அனைவருடைய எதிர்ப்பும் பதிவு செய்யப்பட்டுவிட்டது.

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கோ.சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.